News and Articles in Tamil and English
Please send them to:

THE EDITOR,

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka

Under No.Q / J / 104 / News / 89

*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*

**Vol: 155 Jaffna, Friday 09, September 1994 No: 19**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs.100/-
*For Advertisements*

*Apply to:*
THE MANAGER

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

University of Jaffna College Sri Lanka Ceylon Division Library

## Bharathi Festival of Jaffna College

Jaffna College will conduct its Annual Bharathi Festival on the 9th and 10th of September. The second day's proceedings will take place in the Bishop Kulandran Hall in Jaffna Town. University lecturers, prominent writers and scholars are taking part in the festival. Jaffna College had been celebrating Bharathi Day without break since 1982, the Bharathi Centenary Year.

— —

## Mrs. Lizzy Paul

A tablet inserted in memory of the late Mrs. Lizzy Paul at Chankanai Church will be unveiled by Bishop S. Jebanesan on Thursday the 15th September at 4-30 p.m.

# Christian Medical College Vellore Revisited

— Dr. Mrs. Chandra Ambalavanar

**When the Alumni Association of CMC Vellore, meets, in August every year it has been the CMC Alumni tradition to organise at least 4 batches of alumni (by years) to come together a day earlier to meet by themselves and later to take part in the several alumni celebrations. Every batch is expeted to meet once in 5 years.**

It was my fortune to be able to have made it at last to one of these get-to-gethers this August. Our batch is that of 1949 (year of entering CMC). 17 of us were there out of 31. Three of us had gone from outside India. As we met together the years in between seemed to roll away. As some of us travelled together from madras and later all of us stayed together in "Sneha Theepam" a Catholic Retreat Centre 3km from CMC Hospital. We talked and joked and shared our experiences and news of ourselves.

The General Alumni met on 13th August for a full day's programme in Ida Scudder Auditorium at CMC. The Director of CMC Hospital and the lady Principal of CMC brought us up to date on what they have done and what they propose to do in the next year.

There was a service in the chapel in the evening and as I sat there with my batch mates, nothing seemed to have changed since our College days. I could even imagine the saintly Dr. Ida Scudder, founder of CMC, standing behind the lectern, reading the love chapter 1 Corinthians: 13, her favorite bible passage and telling us about "Her Master" and His love for us.

The day ended with an entertainment organised by the students but most of the entertaining was done by the batches that came together. Many had come all the way from U.S. England and Middle East, others from all over India. Some had even come with their families. I couldn't help being overcome by the love the alumni had for their dear alma mater. Looking back the tedious journey from Jaffna to Colombo seemed well worth the trouble.

CMC stands as a monument to Dr. Ida Scudder's committment and response to her Master's call and also to the dedication and sacrifices made by all those who have served there since-missionaries and nationals. Dr. Ida Scudder was the grand daughter of Dr. John Scudder whose 200th birth anniversary we are celebrating in the Jaffna Diocese.

———

## Vocational Training Centre-Manipay

The oldest of such Centres of the Jaffna Diocese held its 7th diploma awarding ceremony and exhibition on Monday the 29th August at 3 pm in the centre at Green Memorial Hospital. The Rt. Rev. Dr. S. Jebanesan and Mrs. Jebanesan were the chief guests. The function was presided over by Mrs. Indra Jeyakumaran who is in charge of the centre.

Bishop Jebanesan in his speech said that this and other 7 such centres were started to help especially those young girls who had done O/L or A/L exams and then dropped out of schools. These centres he hoped have and will enable these young women to use the skills they have learnt and be able to earn for themselves. Mrs. Jebanesan then gave away the certificate.

There were many more exhibits this time specially on the handidraft section. The articles made of plantain tree trunk fibre which we understand is very difficult to obtain and the floral section were the attractions of the day.

The two teachers namely Miss Balambikai and Miss V. Thambyrajah and last but not least the students are to be congratulated for the high standard achieved.

— — —

## CHAVAKACHCHERI CHURCH *Renovation Fund*

**Melbourne Australia**

| | | | |
|---|---|---|---|
| Mrs. Evelyn Gunaratnam | — | Australian | $ 200. 00 |
| Prof. & Mrs. C. J. Eliezer | — | " | $ 100. 00 |
| Prof. & Mrs. C. Chinappsh | — | " | $ 100. 00 |
| Mr. & Mrs. George Vaithianathan | — | " | $ 50. 00 |
| Ashok & Aravind Jeganthan | — | " | $ 250. 00 |
| Rev. N. Subramaniam | — | " | $ 25. 00 |

———

## Interdenominational Committee for KNH in India

The KNH, the Child Care Agency of Germany has constituted an interdenominational committee to administer its projects in India. Hitherto it was managed by the Church of South India. Hereafter like the Sri Lankan KNH Interdenominational Council, India too will have a Interdenominational Church Council to administer the KNH programmes.

## Memorial Service For Mr. K. Nesiah

A Service of Thanksgiving for the life and work of the late Mr. K. Nesiah was held in Colombo at the Cathedral Church at Christ the Living Saviour on Thursday 17th March 1994. Tributes were paid by Dr. E. S. Thevasagayam who spoke about Mr. Nesiah's contribution to life in Jaffna and to St. John's College, by Mr. Irvin Dassenaike, who spoke about Mr. Nesiah as a teacher and Boarding House Master at St.Thomas' College, Mr. Lakshmi, and by Mrs. Chitra Fernando who spoke of Mr. Nesiah as an educationist and of her remembrances of him as her teacher and mentor at the University of Ceylon.

Lessons were read by Mrs. Kiruba Hoole, Mrs. Kaushala Joseph and Mr.Vaseeharan Nesiah while his son Mr. Lanka Nesiah read 'A Call to Renewal', written

*( Continued on page 4)*

## IN MEMORIAM

*In Loving Memory of*

***Ruby Ariyamalar Appadurai***

**Called to rest on 21 - 9 - 93**

"Memory lingers everywhere
Thoughts of you are ever dear"

Affectionately remembered by her loved ones at
25, Somasunderam Avenue,
Chundikuli.

பேராயர் சந்திப்புக்கள்

# செட்டிகுளத்தில் ஓர் ஆலயம்

செட்டிகுளம், மதவாச்சி - மன்னார் வீதியில் அமைந்துள்ள ஓர் அழகிய கிராமம். விஞ்ஞானத்தின் வியத்தகு முன்னேற்றங்களும் நவநாகரீக உலகின் விசித்திரங்களும் இந்தக் கிராமத்தினை முற்றாக ஆக்கிரமித்துவிடவில்லை. எங்கு பார்த்தாலும் அழகிய உலர்வலயக் காடுகள் காணப்படுகின்றன. இந்தக் காடுகளில் யானைகளும், சிறுத்தைகளும், மான்களும், மரைகளும் உல்லாசமாகப் பவனிவருகின்றன.

இங்கே மதவாச்சி – மன்னார் வீதியில் 24ஆவது கிலோ மீற்றர் கல்லுக்கு அண்மையில் எமது தென்னிந்திய திருச்சபையின் சிற்றாலயம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. 3½ஏக்கர் நிலம் கொண்டதாக இந்த மிஷன் வளவு அமைந்துள்ளது. இந்த வளவுக்குள்ளே ஓர் அழகிய மாந்தோப்பு உருவாகி வருகிறது. பகற்பராமரிப்பு நிலையத்துக்காக இரண்டு சிறந்த கட்டிடங்கள் காணப்படுகின்றன.

ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வவுனியா திருச்சபை சேகரப் போதகர் வண. பி. ஜெய. சூரியகுமார் தமது மோட்டார் சைக்கிளில் என்னை செட்டிகுளத்துக்கு அழைத்துச் சென்றார். அதிகாலையில் வவுனியா திருச்சபையிலும், சாளம்பைக் குளத்திலும் நற்கருணை ஆராதனை நடத்திவிட்டு செட்டிகுளம் புறப்பட்டோம். சூரியகுமார் போதகர் செட்டிகுளம் செல்ல தெரிந்து கொண்ட பாதை; பூவரசங்குளம் செட்டிகுளம் பாதை — பூவரசங்குளத்திலிருந்து 8 மைல் பிரயாணம் செய்தால் செட்டிகுளத்தை அடைந்து விடலாம். இந்தப் பாதையில் சனநடமாட்டம் இல்லை. காட்டு வழியாக இருந்தது. சிறிலங்கா இராணுவத்தினர் மட்டும் காவல் அரண்களை அமைத்து பரிசோதனை செய்து வருகின்றனர். வண சூரியகுமார், செட்டிகுளத்தை நாம் சென்றடையும் வரை அந்தக் காட்டிலே யானைகளும் சிறுத்தைகளும் இருக்கின்றன என்றும் என்னை மிகவும் அவதானமாக பார்க்கும் படியும் கூறிக் கொண்டே சென்றார்.

சரியாக மத்தியானம் ஒரு மணிக்கு நாம் செட்டிகுளத்தை வந்தடைந்தோம். நாம் வருவதற்குச் சற்று தாமதமாகி விட்டதனால் திரு எட்வேட் ஜெயராஜா அவர்கள் எம்மைத் தேடிக்கொண்டு நடுக்காட்டுக்கு வந்துவிட்டார். இந்த ஆரவாரத்தினால் விளிப்படைந்த இராணுவத்தினர் எம்மை நிறுத்தி ஆவணங்களைக் காட்டும்படி பணித்தனர்.

பிற்பகல் 2 மணிக்கு நற்கருணை ஆராதனையை செட்டிகுளம் ஆலயத்தில் நடத்தினோம். ஏறத்தாள 25பேர் இதில் கலந்து கொண்டனர்.

சமீபத்தில் ஆரம்பித்த யுத்த நடவடிக்கையால் அதிக அளவில் இக்கிராமங்கள் பாதிக்கப்பட்டன. பல குடிமனைகள் உடைக்கப்பட்டும், சிரனிந்தும் காணப்படுகின்றன. பலர் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். சிலர் வவுனியா பட்டினத்துக்கும் இன்னும் சிலர் கிளிநொச்சி, மாங்குளம் போன்ற பகுதிகளுக்கும் அகதிகளாகச் சென்றுள்ளனர்.

இங்கு ஒரு காலத்தில் தென்னிந்திய திருச்சபையின் இரு வணக்கஸ்தலங்கள் இருந்தன. ஒன்று செட்டிகுளத்திலும் மற்றையது அடம்பன் குளத்திலும் இருந்தது. அடம்பன் குளத்தில் 5 வீடுகளைக் கொண்ட குடியேற்றத் திட்டமும் செட்டிகுளத்தில் 35 வீடுகளைக் கொண்ட குடியேற்றத் திட்டமும் இருந்தன. இப்பொழுது இந்தியா சென்ற அகதிகள் சிறிது சிறிதாகத் திரும்பி வருகின்றனர். திரும்பவும் அடம்பன் குளத்தில் ஜெப ஆலயத்தைத் கட்ட வேண்டுமென்று கூறுகிறார் திரு. எட்வேட் ஜெயராஜா.



அடம்பன் குளத்திலிருந்து வவுனியா பாதையினூடாக சென்றால் வீரபுரம் குடியேற்றத் திட்டத்தைக் காணலாம். இங்கே அரசினர் 450 கல்வீடுகளைக் கட்டி தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் வழங்கியிருக்கின்றனர். வீரபுரத்தில் மீண்டும் கலகலப்புக் காணப்படுகின்றது. இங்கே ஒரு பாடசாலையும் அரசினர் கட்டியிருக்கின்றனர். இந்தப் பாடசாலைக்கு அருகாமையில் ஒரு பகற் பராமரிப்பு நிலையத்தை அமைக்க வேண்டிய தேவையிருக்கின்றது. வீரபுரத்திலிருந்து 2 மைல் தூரம் பிரயாணம் செய்தால் கக்காரன்குளம் என்ற இடத்தை அடையலாம். இந்த மக்களுடைய வாழ்க்கை முறையைப் பார்த்தால் வேடருடைய எண்ணம் தான்வரும் இந்த மக்கள் 20ம் நூற்றாண்டிலும் உடும்பு பிடித்தல், முயல் பிடித்தல், தேன்எடுத்தல் முதலிய தொழில் தொழில்களையே செய்து வருகின்றனர். சிலர் மீன்பிடி தொழிலில் ஈடுபடுகின்றனர். இந்த மக்களோடு பேசுவது, இருப்பிடங்களைப் பார்ப்பதும் மிகவும் சுவாரஸ்யமான அனுபவம். அவர்கள் தமது பழைய வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளாமலிருப்பது மிகவும் வித்தையேயாகும்.

செட்டிகுளம் தேவாலயத்துக்கு அண்மையில் ஒரு சிறந்த பகற் பராமரிப்பு நிலையம் காணப்படுகின்றது. இங்கே 60 பிள்ளைகள் வரையில் கற்று வருகின்றனர். இங்கே இரண்டு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். இவ்விடம் கே. என். எச். பிரமுகர் திரு. ஹில்லர் விஜயம் செய்தார். 60 பிள்ளைகளையும் கண்டு பூரிப்படைந்தார்.

செட்டிகுளம் இப்போது இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. இரவில் சனநடமாட்டம் இல்லையென்றே கூறலாம். பகலில் பல்வேறு இடங்களிலிருந்து இங்குள்ள காரியாலங்களில் பணியாற்ற உத்தியோகஸ்தர்கள் வருவார்கள். அரசினர் தற்போது செட்டிகுளம் மதவாச்சி வீதியைச் செப்பனிட்டு அமைத்துள்ளனர். ஆனால் செட்டிகுளம் வவுனியா வீதியில் இன்ன கவனிப்பார் அற்றுக்கிடக்கின்றன. இந்த வீதிகளால் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தால் செம்பாட்டு புழுதி உடலெங்கும் படிந்து விடுகின்றது. செட்டிகுளத்திருச்சபைக்கு அதிக வேலை காத்திருக்கின்றது. இந்தியாவுக்கு சென்ற அகதிகள் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இவர்களை ஆதரிப்பதும் வழிநடத்துவதுவும் திருச்சபையின் கடமையாகும் - இந்தப் பகுதியில் இஸ்லாமியரும் கத்தோலிக்கரும் செறிந்து காணப்படுகின்றனர்.

இங்குள்ள கால் நடைகள் கவனிப்பாரின்மையினால் காடுகளிலே தாமாக வளர்கின்றன சில நாட்களுக்கு முன்பு இவற்றினைப் பலர் வேட்டையாடினார். என்று கூறப்பட்டது. இப்பொழுது இவ்வாறு செல்லுவது ஓரளவுக்குக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இங்குள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் ஆசிரியையாக செல்வி ஜெயராணி றோமானிஸ் ,அவர்கள் கடமையாற்றி வருகின்றார். இவர் சமாதான புரத்தைச் சேர்ந்தவர். உடுவில் மகளிர் கல்லூரியின் தொடர் கல்வித்திட்டத்தில் பயிற்சி பெற்று அரங்கேறியவர்.

திங்கள் காலை திரு எட்வேட் ஜெயராஜா மதவாச்சிக்கு என்னை அழைத்துச் சென்றார். மதவாச்சி-செட்டிகுளம் வீதி கறுப்புக் கம்பளம் விரித்தற் போல மிருதுவாக இருந்தது வழியிலே ஆறு கிராமங்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளது போல தமிழ் முஸ்லிம் என்று கிராமங்கள் காணப்படவில்லை. செட்டிகுளத்தை அடுத்தாற் போல் அடம்பன் குளம். நெரிய குளம் என்று இரு தமிழ்க் கிராமங்கள் அவற்றினைத் தாண்டிச் சென்றால் மாங்குளம் (கண்டி வீதியில் உள்ளது வேறு) பேய் கூப்பிட்டன என முஸ்லிம் கிராமங்கள், அதற்குப் பின் யக்காவ, ரம்பைக் குளம் என்ற இரு சிங்களக் கிராமங்கள். இப்படியாக மக்கள் பிரிந்து பிரிந்து வாழ்கின்றனர். போர் ஓய வேண்டும், சமாதானம் ஏற்பட வேண்டும் என்று பலரும் எதிர் பார்த்திருக்கின்றனர்.

## சமாதானபுரம் சபை நிகழ்வுகள்

**நற்செய்தி விழா:**

18. 06. 1994 அன்று சமாதானபுரம் சபை, கோணாவில் சபை, ஜெயபுரம் சபை ஆகிய மூன்று சபைகளும் ஒன்றிணைந்து சமாதானபுரம் சபை நிலையத்தில் ஓர் நற்செய்திவிழாவை நடத்தின. இதுவே இச்சபைகளால் நடத்தப்பட்ட முதல் நற்செய்தி விழாவாகும். சாலோம் நகர் திருச்சபையிலிருந்து

போதகரும் பத்து வாலிபர்களும் வந்திருந்தனர். கிட்டத்தட்ட எழுநூற்றைம்பது மக்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர் இவ்விழா ஜெயபுரம் சபைப் போதகர் பி. தேவராஜா அவர்களின் ஜெபத்துடன் மதியம் 2. 45 மணிக்கு ஆரம்பமாகியது. சமாதானபுரம் சபைப் போதகர் ஜி. டி. மைனசிலன் இவ்விழாவிற்கு தலைமை தாங்கினார். மூன்று திருச்சபைகளாலும் இவ்விரண்டு நற்செய்திப் பாடல்கள் பாடப்பட்ட பின்னர், சாலோம் நகர் போதகர் வண ரி. எச். வசந்தகுமார் அருளுரை ஆற்றினார். மூன்று திருச்சபைகளாலும் நடனங்கள், நாடகங்கள் அரங்கேற்றப்பட்டு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. இறுதியாக சபையாரின் பாடலுடனும் சமாதானபுரம் சபைப் போதகரின் செபத்துடனும் மாலை 5. 45 மணிக்கு நற்செய்தி விழா இனிதே முடிவுற்றது.

**10 வது ஆண்டு விழா:**

24. 07. 1994 அன்று சமாதானபுரம் சபையின் 10வது ஆண்டு விழா புனித யாக்கோபு நாளின் நினைவையொட்டி மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 10 மணிக்கு சேகரக்குரு வண. ரி. தேவநேசன் திருவிருந்து ஆராதனையை நடத்தினார். மதிய உணவு சபையார் யாவரும் பரிமாறிக் கொண்டனர். மதியம் 2 மணிக்கு வண ரி. தேவநேசன் சமாதானபுரம் சபையின் கொடியினை ஏற்றி வைத்ததோடு கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. சமாதானபுரம் சபை சிறுவர்களாலும் கோணாவில் சபை சிறுவர்களாலும் நடனங்கள் அரங்கேற்றப்பட்டன. சாலோம் நகர் திருச்சபை நல்லதொரு வில்லுப்பாட்டினை நடத்தி பலரது பாராட்டை பெற்றனர். சமாதானபுரம் சபை போதகர் ஜி. டி. மைனசிலன் இவ்வாண்டு விழாவுக்கு தலைமை தாங்கினார். ஜெயபுரம் சபைப்போதகர் பி. தேவராஜா ஜெயபுரம் சபை சார்பாகவும் சாலோம் நகர் சபை போதகர் வண ரி. எச். வசந்தகுமார் சாலோம் நகர் சார்பாகவும் ஆசியுரை கூறினர். சமாதானபுரம் சபை மக்களால் தனிப்பாடல்களும் குழுப்பாடல்களும் நாடகமும் வழங்கப்பட்டன. சமாதானபுரம் சபைப் போதகர் யாவருக்கும் நன்றியுரை கூறினார். சேகரக்குரு வண ரி. தேவநேசன் அவர்களின் ஆசீர்வாதத்துடன் மாலை 4 . 30 மணிக்கு ஆண்டு விழா இனிதே முடிவுற்றது.

**வாலிபர் பாசறை:**

27- 08- 1994 அன்று சமாதானபுரம் சபை வாலிபர்களும், ஜெயபுரம் சபை வாலிர்களும் இணைந்து ஒருநாள் வாபலிர் பாசறைக் கூட்டத்தை ஜெயபுரம் சபைக் கட்டடத்தில் நடந்தினர். மொத்தம் இருபத்தியெட்டு வாலிபர்கள் கலந்து கொண்டனர். காலை 9 . 00 மணிக்கு வழிபாட்டுடன் பாசறைக் கூட்டம் ஆரம்பமாகியது. காலை சமாதானபுரம் சபைப்போதகர் ஜி. டி. மைனசிலன் வேதப்படிப்பு நடத்தினார் மாலை ஜெயபுரம் சபைப்போதகர் பி. தேவராஜா வேதப்படிப்பு நடத்தினார். புதிய பல்லவிகளும், பாடல்களும் வாலிபர்களுக்கு பழக்கப்பட்டன. வாலிபர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் விளையாட்டுகளும் நடத்தப்பட்டன. வாலிபர்களின் ஒப்படைப்பு செபத்துடன் மாலை 4. 30 மணிக்கு வாலிபர் பாசறைக் கூட்டம் நிறைவுபெற்றது. இதுவே இச்சபைகளால் இப்பகுதியில் நடத்தப்பட்ட முதல்வாலிபர் பாசறைக் கூட்டமாகும்.

---

## திருமணம்

உசன் திருச்சபையைச் சேர்ந்த திரு திருமதி பாக்கியநாதன் தம்பதிகளின் மகன் விக்டர் கிருபாகரனுக்கும், அதே திருச்சபையைச் சேர்ந்த திருமதி தேவராஜா, காலஞ்சென்ற திரு. தேவராஜாவின் புதல்வி ஸ்ரெலா வதனிக்கும் 29-08-1994 அன்று உசன் திருச்சபையில் திருமணம் நடைபெற்றது.

சேகர ஊழியன் அருட்திரு ஏ.வி. இயேசுதாசன் இத் திருமண ஆராதனையை நடத்தினார். சபை ஊழியன் அருட்திரு பெஞ்சமீன் ஜெயராஜாவும், அருட்திரு எஸ். சி. ஆர்ணல்ட் அவர்களும் உதவி புரிந்தனர். மணமக்களுக்கான நல்லுபதேசம் அருட்திரு டி.எஸ். தியாகராஜாவினால் வழங்கப்பட்டது. உதயதாரகை மணமக்களை வாழ்த்துகின்றது.

---

## நினைவஞ்சலி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 6ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டமும், அமரர் பேராசிரியர் அ. துரைராசா அவர்ககளின் நினைவஞ்சலிக் கூட்டமும் 28 - 08- 1994 அன்று பழைய கல்லூரி மாடிக் கட்டடத்தில் வைத்தியகலாநிதி எஸ் கனகராசா தலைமையில் நடைபெற்றது.

பேராசிரியர் துரைராசாவின் ஆசிரியரான எமது ஆதீனத்தைச் சேர்ந்த திரு ஏ இராஜசிங்கம் அவர்கள் பேராசிரியர் துரைராசாவின் ஞாபகார்த்தப் பெயர் சூட்டி அன்னாரின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து, அஞ்சலி உரையாற்றினார்.

தாரகை ஒளி

"எங்களது காலத்தில் பரிசுத்தத்திற்கான பாதையானது செயற்பாடுகள் எனும் உலகத்துக்கூடாகவே செல்லுகின்றது''
— டாக் ஹாமஷோ


# உதயதாரகை

ஆதின காரியாலயம், வட்டுக்கோட்டை.
*Estd. 1841*

மலர்: 155   09 — 09 — 1994   இதழ்: 19


## நோய் தீர்க்கும் பணி

இயேசு பெருமான் தம் சீடரை ஒன்றாய் வரவழைத்து, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து - கடவுளின் அரசைப் பற்றிப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைக் குணப்படுத்தவும் அனுப்பினார்.

இயேசுபிரானின் திருப்பணியில் நோய்தீர்க்கும் பணி, நடுநாயகமாய் விளங்கிற்று - இயேசுவில் இறைவனின் ஆட்சி வந்து விட்டதென்பதின் பொருள் - நோயாளிகள் சுகம் பெறுகின்றனர்- என்பதே. எனவே, நோய் தீர்க்கும் பணியில் ஈடுபட்டுவோர் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவர்.

இம்மாபெரும் ஆணையை சிரமேற்கொண்டு பணியாற்றிய திருத்தொண்டர்கள் துன்பங்கள், எதிர்ப்புகள் ஆகியவற்றால் தாக்கப்பட்ட போதிலும் - சோர்ந்து போகாமல் திடமனதோடு, தம்மை அழைத்த ஆண்டவர் தம்மருகில் துணையாய் நிற்கிறாரென்ற உறுதியோடு நோய் தீர்க்கும் பணியில் மனமகிழ்வுடன் ஈடுபட்டு வந்ததை நாம் அறிவோம்.

இத்தகைய திருத்தொண்டை ஆற்றியோரில் - டாக்டர் ஜோன் ஸ்கடர் முதன்மையானவர். இவர் உலகத்தின் முதலாவது வைத்திய மிஷனரியாவார். 1819 ம் ஆண்டு தன் தாய்நாடாகிய அமெரிக்காவை விட்டு - யாழ்ப்பாணத்தை வந்தடைந்து பதினாறு ஆண்டுகள் பணியாற்றினார். யாழ் மண்ணில் காலடியெடுத்து வைத்த இப்பெரியார் பிறந்த இருநூறாம் ஆண்டு நிறைவை நமது ஆதீனம் இம்மாதம் 3 ஆம் நாள் வட்டுக்கோட்டையில் தகுந்த முறையில் கொண்டாட ஒழுங்கு செய்ததையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். இவ்விழா, நம் வாலிபரிற் சிலரையாயினும் டாக்டர் ஸ்கடரின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற உந்துதலாயிருக்கும் என்பதே எமது நம்பிக்கை.

கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபை – ஒரு குணமாக்கும் சமுதாயமாகத் திகழ்வதற்கென்றே உலகில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வுலக வாழ்க்கையின் நெருக்கத்தால் பாதிக்கப்படுவோருக்கு சுகமளிக்கும் சமுதாயமாய் இயேசுவின் திருவுடலாகிய திருச்சபை விளங்க வேண்டும்.

மக்களின் பிணி தீர்ப்பதற்கான முதலிடம் மருத்துவ மனையல்ல. இறைமக்கள் ஒருமனத்துடன் கூடும் திருச்சபையே என்கிறார் ஆர்ச்பிஷப் உவில்லியம் டெம்பிள். இக்கூற்றை ஆழமாகச் சிந்திப்பது நல்லது. புதிய ஏற்பாட்டை உற்றுநோக்கும் போது திருச்சபை இதற்காகவே இயங்கி வந்ததென்பது தெளிவாகும்.

திருச்சபை ஒரு நோய் தீர்க்கும் சமுதாயம். இதைத் தெளிவாகப் புதிய ஏற்பாடு விளக்குகின்றது எனவே கிறிஸ்தவ ஊழியரின் முக்கிய கடைமைகளில் ஒன்று நோய் தீர்க்கும் திருப்பணியில் பங்கு கொள்வதே என அறிக. நோய் தீர்க்கும் ஊழியத்தில் இறையரசு வெளிப்படையாகக் காணப்படுகிறது. 'குணப்பட்ட ஓர் ஐக்கியமாகவும், குணமாக்கும் ஓர் ஐக்கியமாகவும் திருச்சபை திகழ வேண்டும்' என்கிறார் பேராயர் பெக்கன்உறலம் உவால்ஷ்.

இக் குணமாக்கும் கிரியையில் இறைவனின் அன்புக் கரங்களைக் காண்கிறோம். இக்கிரியை திருச்சபையின் எல்லைக்கப்பாலும் பரவவேண்டும். இதனையே டாக்டர் ஸ்கடரின் வம்ச வரலாறு நமக்கு உணர்த்துகிறது. இந்தச் செய்தியை நமது சபையின் இளஞ் சந்ததியினருக்கு அறிவிப்பதே நமது கடமை.

### ஊழியர்களை நினைவு கூருகின்றோம்

※ அருட்திரு எஸ். என். ஹிற்ச்கொக்
நினைவு நாள் — செப்டெம்பர் 01 ஆம் திகதி

※ அருட்திரு சாம் தம்பு
நினைவு நாள் — செப்டெம்பர் 12 ஆம் திகதி

''நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரரே.....''

தியானம்: (யோ - 2 : 1 - 12)

## "என் நேரம் இன்னும் வரவில்லை"

யோவான் நற்செய்தி நூலில் குறிக்கப்பட்ட அற்புதங்கள் அனைத்தும், இயேசு மகிமைப்படும் வேளைக்கான முன் அடையாளங்கள் என யோவான் காட்டுகிறார். இயேசுவின் மகிமையை வெளிப்படுத்த, அடியார் உள்ளங்களில் விசுவாசத்தை உருவாக்கத் தக்க அடையாளங்களே இவை.

இயேசுபிரான் தன் திருப்பணியை முதன் முதலாக ஒரு திருமண வீட்டில் தொடங்குகிறார். திருமணத்தைத் தமது பிரசன்னத்தினால் சிறப்பிக்கிறார். திருமண கொண்டாட்ட மகிழ்ச்சியில் அவரும் பங்கெடுத்து, அவர்களின் மகிழ்ச்சியை நிறைவாக்குகின்றார்.

இந்த மங்களமான தொடக்கம்- கிறிஸ்து பெருமானின் அருட்பிரசன்னம் - உயர்வு தாழ்வைக் கருதாது அனைவருக்கும் உரியதெனக் காட்டுகிறது. மக்களின் மகிழ்ச்சியில் பங்கெடுக்கவும், அவர்களின் துன்பங்களில் கலந்து கொள்ளவும், அன்னாரின் குறைகளை நிறைவாக்கவுமே ஆண்டவர் வந்தார்.- இயேசு இல்லாத எத்தகைய கொண்டாட்டங்களும் நீர் மேற்குமிழி போன்றதே! அது நிலைக்காது.

திருமண விருந்தில் திராட்சை இரசம் தீர்ந்துவிடவே மரியம்மாள் இதனைத் தன் மகன் இயேசுவிடம் அறிவித்தார். அதற்கு இயேசு தனது வேளை வரும்போது, தான் வேண்டிய ஒழுங்குகளைச் செய்வதாகக் கூறினார்.- இன்றும் நமது தேவைகளை அவருக்கு நாம் அறிவிக்கும்போது, அவர் தமக்குரிய நேரத்தில் நமது குறைவை நிறைவாக்குவார் - நமது பாத்திரம் நிரம்பி வழியத்தக்கதாய்த் தந்தருளுவார்.

திருமண விருந்தின் இறுதியில் கிடைத்தது அவர்கள் எதிர்பாராத- ஆறு கற்சாடிகள் நிறைந்த முதல் தரமான திராட்சை இரசம். ஆம், இயேசுவின் வேளை வரும்போது, அனைத்தும் பரிபூரணமாக நமக்களிக்கப்படும். இந்த உண்மையை நம்புகிறோமா?-நமது குடும்ப வாழ்வில் ஏற்படும் குறைவுகளை, கஷ்டங்களை இயேசுபிரானிடம் அறிவிக்கிறோமா? நம்பிக்கையோடும் பொறுமையோடும், அவரின் பதிலுக்காகக் காத்திருக்கிறோமா?- சிந்தியுங்கள்!

இவ்வற்புதத்தில், இயேசு சாதாரண நீரை - இவ்வுலக வாழ்க்கைககு அடையாளமாகவும் திராட்சை இரசத்தைத் தான் அருளும் மெய்வாழ்வாகிய விண்ணுலக வாழ்க்கைக்கு அடையாளமாகவும் கொண்டார்.- ஆகவே, தண்ணீர் திராட்சை இரசமாக மாற்றப்பட்டதுபோல, மக்களின் இவ்வுலக வாழ்க்கையை விண்ணகத்தின் மெய்வாழ்வாக இயேசு மாற்றுவார்.

இதற்கு. நமது கீழ்ப்படிவும், ஒத்துழைப்பும் தேவை. எம்மை முற்றாக அவர் கரங்களில் ஒப்படைத்தால், நமக்குப் புதுவாழ்வை அவர் நிச்சயமாக அளிப்பார். - மரியாள் திருமண வீட்டுப் பணியாட்களைப் பார்த்து – அவர் (இயேசு) உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதைச் செய்யுங்கள்' என்றார். அவர்கள் எம்பெருமானின் ஆணைப்படி கீழ்ப்படிந்து செயலாற்றினர். அதனால் அவர் செய்த அற்புதத்தில் இப்பணியாட்களுக்கும் பங்களிக்கப்பட்டதைக் காண்க.

நாமும் நமதாண்டவரின் கட்டளைகட்குக் கீழ்ப்படியும்போது - அவர் செய்யும் அரியசெயல்களில் பங்கெடுக்கும் வாய்ப்பைப் பெறுவோம், - பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம்' (1 சாமு. 15 : 22) — எங்கள் குறைவுகள் நிறைவாக்கப்பட, துன்பங்கள் இன்பமாக மாற்றப்பட, வாழ்க்கையின் தேவைகள் தீர்க்கப்பட — இயேசுவிடம் நம்மை முற்றாக ஒப்படைப்போமாக.

இயேசுபெருமான் எங்கு தங்குகிறாரோ, அங்கு புதிய மாற்றம் காணப்படுவது நிச்சயம். அன்றுபோல் இன்றும், தம்மிடம் விசுவாசத்துடன் வருகிறவர்களுக்குப் புதிய வாழ்வு அளித்து வருகிறார். நாமும் நமதுபங்கான கீழ்ப்படிதலையும் ஒத்துழைப்பையும் எம் பெருமானுக்கு வழங்குவோமாக.

''இதோ. நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்''

(திருவெளி 21 : 5)

— அன்படியான்

---

## வழி அனுப்பும் வழிபாடு

கடந்த மாதம் ஏழாம் திகதி காலை ஒன்பது மணிக்கு யாழ் பல்கலைக் கழக கிறிஸ்தவ மாணவர் நிலையத்தில் பதினான்கு மாணவர்களை வழி அனுப்பும் வழிபாடும், புதிய ஊழியன் வண. எஸ். மில்ரன் அவர்களை வரவேற்கும் வைபவமும் நடைபெற்றது. இவ்வாராதனையில் ஒவ்வொரு பீடத்திலும் மூன்று மாணவர்கள் தங்களது அனுபவங்களை சாட்சியாக எடுத்துரைத்தார்கள். அத்தோடு அவர்களுக்காக தனி செபங்களும் ஏறெடுக்கப்பட்டன. அன்றைய தினம் மெதடிஸ்த சபையின் ஊழியன் வண. எஸ். எஸ் கருணைராஜா அவர்கள் அருளுரை ஆற்றினார்கள். மாணவர்களின் மேல் கைகளை வைத்து ஆசிர்வதிப்பதில் அருட்திரு எஸ். ரெறன்ஸ், அருட்திரு. எஸ். எஸ் கருணைராஜா அருட்திரு எஸ். மில்ட்டன் ஆகியோர் பங்கு பற்றினர். அதனைத் தொடர்ந்து திருவிருந்து ஆராதனை நடைபெற்றது

மாணவர்களுக்கு சிட்டி விளக்குகள் பரிசுகளாக வழங்கப்பட்டன. இறுதியில் தேனீர் உபசரணையும் நடைபெற்றது

---

## சிந்தனைக்கு விருந்து!

**அன்பே - ஆண்டவன்:**

அன்பே ஆண்டவன் என்பது ஆன்றோரின் அருள்வாக்கு. அன்பற்றவர்கள் அறிவிலிகள் அன்புக்குட்படாத உயிர் எதுவுமில்லை.

மனிதன் அன்புதனை அகத்தில் கொண்டு ஆற்றும் காரியங்கள் அளவிட முடியாதவை. அவ்வன்பின் ஆற்றலினை - அன்பு சுடர் வள்ளல் பெருமான் அழகாக நயம்பட நவிலுகின்றார்.

,'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்து அமர் அமுதே
அன்பெனும் குடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
................................................''

அன்புள்ளம் கொண்டோரிடம் இயற்கை முதல் இறைவன் வரை ஐக்கியமாகிவிடும். — ''வள்ளலார்''

THE MORNING STAR

Diocesan, Office Vaddukoddai 09 - 09 - 1994

EDITORIAL

## *General Elections* 1994

Two weeks have passed since the people gave their verdict at the General Elections to parliament on the 16th of August 1994.

The Proportional Representation system has its merits and demerits. One of the demerits has been borne out clearly at this Election. The People have clearly voted for change and decided to turn out the former party in power, but the PR system has given the victorious People's Alliance only a wafer thin majority in Parliament. The UNP's claim that its defeat was only by a narrow margin has to be seen in the light of the fact that apart from the two Districts in the Northern Province where the Elections were nothing but a farce, in the other 20 Districts the PA romped home in 13 Districts whereas the UNP could claim victory only in six. These included Nuwara Eliya, Kandy, Badulla. Digamadula and Trincomalee, all of them with considerable Tamil populations. The PA could therefore claim a clear mandate from the people of the South. It is therefore all the more astonishing that no sooner the results of the Elections were known the UNP could even have dreamt of holding on to power by running a minority Government. Thank God it is all now past history.

Much has already been written by analysts interpreting the events of the last few weeks and the results of the Polls. The people have said in no uncertain terms to the UNP, "You have had your chance. You have had 17 years to put things right. It is time for you to go."

The People's alliance took a clear stand on the ethnic issue favouring a peaceful settlement. On the contrary the UNP leader, the President of the country promised a military victory within two weeks of Elections. Dinesh Gunawardene and his party which vigorously opposed the PA's policy on the ethnic issue were completely routed while Vasudeva Nanayakara who advocated the reognition of the the traditional Tamil homeland and granting autonomy to the Tamil region was returned topping the list in the Ratnapura District.

All these are atleast hopeful signs that there is a change of mood among the Sinhalese masses and an eagerness to stop the war and work for a peaceful solution,

The voting in the Eastern Province is also significant. The predominantly Tamil constituencies voted for the TULF and the predominantly Muslim constituencies voted for Mr. Ashroff's Muslim Congress. This again indicates the stand of the voters of the Eastern Province on the merger issue and the Tamil Homeland.

The great star of the Elections is obviously Chandrika Bandaranaike Kumaranatunge who has now emerged as a national leader in her own right. Possessed of a compulsive charm, she has shown strength of conviction, courageous determination and an astute judgement combined with a remarkable political skill. All these we feel sure will stand her in good stead in the execution of her office as Prime Minister of this country. Her late father S W.R.D. Bandaranaike we recall was fond of the quote about our living in an age of transition, between two ages, the one dead and the other struggling to be born. The daughter now takes over after 35 years of a not too enviable period in the history of this blessed Isle where politicians have indulged in the art of muddling through. Her mother Sirimavo too had a considerable share in this. The new age of peace and justice, of freedom and prosperity for Sri Lanka is still going through the process of struggling to be born.

The new Prime Minister has rightly identified the problems she has to tackle of which the ethnic problem is the uppermost. It is to her credit that she is, in our view, the first Sinhalese leader of a major political party that has spurned the use of communal chauvinism or anti-Tamil baiting to gain votes in the South. On the contrary, she has been bold to state clearly as her party's policy, unconditional talks with the LTTE to arrive at a politically negotiated settlement. She has also not hesitated to acknowledge the just demands of the Tamil speaking community. Therefore, she is in a strong position to take the imaginative and courageous steps necessary to reach a settlement that will result in justice, peace and prosperity for all.

Politicians dream dreams and see visions but it is the statesmen who can infect the people with their dreams and visions and imbue them with the sense of purpose and direction to realize those visions. This is the challenge that faces Chandrika. Statesmen must act as if their vision were already part of their experience and work assiduously to make it the experience for all.

The University of Sorbonne where Chandrika read Political Science is a very different place today from the institution founded by Robert de Sorbon in the 13 th Century. Her student carrer we are told coincided with the period of the radical student revolt and student power in Europe. A well known graffiti on the walls of the Sorbonne during those days was, "Be reasonable, ask for the impossible". We wish for Chandrika the courage to work for the impossible and the wisdom to be reasonable in achieving that end.

The other hero of this election we should not forget is Ranil Wickremasinghe the former Prime Minister. The UNP which realized, the charge of widespread corruption had begun to stick had no alternative but to push Ranil to the forefront during the campaigns, he being the only person in their ranks with a clean image. But even his image could provide no ballast to the party in stormy and murky waters. It is to his credit that he acted as a gentleman in Politics - a rare species indeed in this fair Isle - to promptly step down and assist in the transfer of power according to the best democratic traditions. This was again in stark contrast to the power hungry desperados in his party who tried every trick possible to frustrate the people's will. We trust he will continue to promote those democratic traditions from the opposition benches.

The Elections are over, the task of good government begins and may we hope that the new Parliament-Government and Opposition together willhstrive relentlessly towards the achievement of that freedom, justice, peace and prosperity which is the cry of every person in Sri Lanka.

## DEATH

We are sorry to record the death of Miss Parimalam Chellammah Ariacuddy, a long standing member of the CSI Church, Tellippallai on 4th September 1994.

The funeral service was held on the following day in Jaffna. The Rev. V. Rajkumar, the Presbyter of Tellippallai Church conducted the service and preached the sermon. A tribute for the life and work of 'Parimalacca' as Miss Ariacuddy was known, was paid by the Rev. D. C. Ratnasingham. The Revds. S. P. Nesakumar, D. S. Thiagarajah, G. D. Anandarajan and S. I. Anandarajan also took part in the funeral service. The burial service was performed by the Rev. S. P. Nesakumar, Vicar of St. John's Church at the St. John's burial grounds, assisted by the Rev V. Rajkumar.

Parimalacca has been a source of blessing to many during her teaching career. She had made arrangements with the Rotary Club, Jaffna for the donation of her eyes after her death. A ten years old student and a seventeen years old youth received their sight by the timely donation. Parimalacca has left behind a fragrance which time cannot obliterate.

——

### Momorial Service

*( Continued from page 1 )*

by Mr. K. Nesiah as an appeal to all Sri Lankans on the occasion of the April New Year 1969. The grand children sang a song 'Only Remembered' while Mrs. Gowri Anandanayagam sang a special anthem

The Rt. Rev. Kenneth Fernando and the Rt.Rev.Swithin Fernando co-celebrated at the Eucharist, assisted by the Ven. Sam Horshington, the Very Rev Sydney Knight and the Rev. Duleep de Chickera.

### A Woman B. D.

We congratulate Mrs. Shantha Jeyanesan on her completing her B. D. degree of the Serampore University. She is the wife of the Rev. S Jeyanesan, Pastor of the Colombo Church. She is a graduate of the University of Sri Lanka and a teacher in a Government School.

We hope her example will be followed by other women with theological interests. —

### To Australia on a Two Months Assignment

Rev S. Jeyanesan, our Pastor in Colombo left for Australia on the 28th August on a two months assignment. He will be visiting the congregations in the Uniting Church and explain to them the work of the Jaffna Diocese of the Church of South India. He will return to Colombo in November 1994. —

### New President of the Methodist Conference

The Rev Dulip Fernando has teen elected President of the Methodist Church of Sri Lanka from August 1995. We congraulate the Rev. Dulip Fernando and wish him all success. —

### Rt.Rev Prakasa Rao Restorad To Perfect Health

We are happy to inform that the Rt Rev. Prakasa Rao, Bishop in Krishna-Godavari of the C.S.I. who underwent heart surgery has recovered fully and has resumed work. —

### Bishop Shettian's Illness

We are sorry to learn that the Rt. Rev. D. P. Shettian, Bishop in Karnataka of the C. S. I. is seriously ill. Friends and members are kindly requested to pray for the recovery of Bishop Shettian.

### Bishop Pothirajulu Resigns

The Rt. Rev. Dr. D. Pothirajulu, Bishop in Madurai, Church of South India has resigned from the Bishopric of Madurai. He has said personal reasons had compelled him to retire prematurely.

*Registered as a News paper at the P. O. Sri Lanka under No. QJ/14089 News Printed for the Jaffna Diocesan of the Church of south India at Arun Printers and Publishers, 15, 2nd lane, Jaffna. on Friday the 09th of September 1994 and Published by Mr. T. A. TAMBIYAPPA Diocesan Office, Vaddukoddai.*